


**06.03.2025**

**தலைப்பு செய்திகள்**

- **நாட்டில் ஆண்டு** முழுமைக்கும் சுற்றுலா இயக்கம் பரவலாக்கப்பட வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- **மென்பொருள் பிரிவில் சர்வதேச நாடுகளுக்கு நாம்** முன்னோடியாக திகழ்வதாக மத்திய மின்னணு துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- **சிறுபான்மையின சமூகத்தினரின் நலனில் மத்திய அரசு** உறுதிபூண்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு கூறியுள்ளார்.
- **தமிழகஅரசு கல்லூரிகளில் வரும் ஜுன்** மாதத்தில் நான்காயிரம் நிரந்தர பேராசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோ.வி. செழியன் தெரிவித்துள்ளார்.
- **தமிழ்நாட்டில்** ஒருலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மும்மொழி கொள்கைக்கு இணையதளம் மூலம் ஆதரவு வழங்கியிருப்பதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை கூறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

பிரதமர்

**நாட்டில் ஆண்டு** முழுவதும் சுற்றுலா இயக்கம் பரவலாக்கப்பட வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

உத்ரகாண்டில் குளிர்கால சுற்றுலா திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், பருவநிலை இல்லா காலங்களிலும் உத்ரகாண்டிற்கு சுற்றுலா பயணிகள்

வருகைத்தரும் வகையில் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

நாட்டின் எல்லைப்பகுதிகளில் வாழும் மக்கள் சுற்றுலா திட்டங்களால் பயன்பெற வேண்டுமென்று பிரதமர் விருப்பம் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர், ஹர்சில் பகுதியில் சுற்றுலா மேம்பாடு மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் இருசக்கர வாகன பேரணியை துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**அஷ்விணி வைஷ்ணவ்**

**உலகளவில் ஹார்டுவேர் எனப்படும் வன்பொருள்** துறையில் இந்தியா தனது நிலையை வலுப்படுத்தி வருவதாக மத்திய மின்னணு துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தேசிய ஊடகத்தில் அமைச்சர் எழுதிய கட்டுரையில் மென்பொருள் துறையில் சர்வதேச நாடுகளுக்கு நாம் முன்னோடியாக திகழ்வதாக கூறினார்.

5 செமி கண்டக்டர் ஆலைகளின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டிய அவர், விரைவில் நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட செமி கண்டக்டர் தகடு அறிமுகம் செய்யப்பட்டு புதிய மைல்கல் சாதனை எட்டப்படும் என்றார்.

மின்னணு மற்றும் டிஜிட்டல் பிரிவில் நாட்டின் சாதனைகளை பட்டியலிட்ட அமைச்சர் தொழில்நுட்பமும், படைப்பாற்றல் திறனும் குடிமக்களின் வாழ்க்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவில் ஆளுமை பெற நடைமுறை சார்ந்த தொழில்நுட்ப சட்ட அணுகுமுறையை நம்நாடு மேற்கொள்வதாக அவர் எடுத்துரைத்தார்.

இணையதள குற்ற அச்சுறுத்தல்களுக்கு எதிரான செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு நடைமுறைகளை இந்தியா பொறுப்புடன் உறுதிசெய்து வருவதாக திரு. அஷ்விணி வைஷ்ணவ் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

**கிரண் ரிஜுஜு**

**சிறுபான்மையின சமூகத்தினரின் நலனில் மத்திய அரசு** உறுதியுடன் இருப்பதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு தெரிவித்துள்ளார்.

கேரளமாநிலம் திருவனந்தபுரத்தில் தென் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான பிரதமரின் சிறுபான்மையினர் வளர்ச்சி மேம்பாடு திட்ட பயிற்சி கருத்தரங்கில் இன்று உரையாற்றியஅவர், உள்ளடக்கிய வளர்ச்சிக்கு அரசு முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

தேசிய சிறுபான்மையின மேம்பாட்டு நிதி கழகத்தின் திட்டங்கள் தகுதியுடையவர்களுக்கு சென்றடைவது உறுதி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து நலத்திட்டங்களை வலுவுடன் செயல்படுத்துவதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் அனைவருக்கும் வளர்ச்சி என்பதை நோக்கமாக கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நலத்திட்டங்களுக்கான நிதியுதவியில் எந்த பற்றாக்குறையும் இருக்காது என அமைச்சர் உறுதியளித்தார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக பிரதமரின் ஜன் விகாஸ் காரிக்ரம் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்டங்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖

**அனில் சவ்ஹான்**

**ஆஸ்திரேலியாவிற்கு அரசுமுறை பயணம்** மேற்கொண்டுள்ள பாதுகாப்பு படை தலைமை தளபதி ஜெனரல் அனில் சவ்ஹான் அந்நாட்டின் பாதுகாப்பு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதியையும் வளத்தையும் மேம்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ள நிலையில் இதுதொடர்பான ஆலோசனைகள் இதில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**திருவள்ளூர் மாவட்டத்தில் வணிகவரி** பதிவுத்துறை சார்பில் 22 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பிலான மேம்படுத்தப்பட்ட 12 புதிய சார்பதிவாளர் கட்டட அலுவலகங்களை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இவற்றை திறந்து வைத்த முதலமைச்சர், வருவாய் துறையினரின் பயன்பாட்டிற்காக நான்கரை கோடி ரூபாய் மதிப்பிலான 51 புதிய வாகனங்களின் சேவையையும் துவக்கி வைத்தார்.

**மேலும் கலை** பண்பாட்டுத்துறை சார்பில் சிற்பக்கலைகளில் திறன்பெற்ற 6 கலைஞர்களுக்கு நடப்பாண்டிற்கான கலைச்செம்மல் விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**கோ.வி. செழியன்**

**தமிழகஅரசு கல்லூரிகளில் வரும் ஜுன்** மாதத்தில் 4 ஆயிரம் நிரந்தர பேராசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோ.வி.செழியன் தெரிவித்துள்ளார்

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர் இம்மாத இறுதியில் ஆயிரம் கவுரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**உதயநிதி**

**தமிழக அரசு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு** பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் பழவனகுடியில் மகளிர் சுயஉதவி குழுவினருடன் இன்று கலந்துரையாடிய அவர் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையையும் அவர் இன்று ஆய்வுசெய்கிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**நெல்லை தாமிரபரணி நதி தூய்மைப்பணிகளை** மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

முதற்கட்டமாக 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, மரக்கன்று நடும் பணிகளும் நடைபெறவுள்ளன.

பாளையங்கோட்டை மேட்டுத்திடல் பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**மும்மொழி கொள்கை**

**தமிழ்நாட்டில்** ஒருலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மும்மொழி கொள்கைக்கு, பாரதிய ஜனதா கட்சியின் இணையதள இயக்கத்தில் ஆதரவு வழங்கியிருப்பதாக கட்சியின் மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுபள்ளிகளில் மாணாக்கருக்கு இருமொழி கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள பாகுபாட்டை களைவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாநில பி.ஜே.பி. மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மாநில அரசின் மும்மொழிக்கு எதிரான கொள்கைக்கு மக்களிடையே ஆதரவு இல்லை என்று கூறிய அவர், இதை மறைப்பதற்காகத்தான் ஹிந்தி திணிப்பு என்ற பொய்யான பிரச்சாரத்தை தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

மெட்ரிக் பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாய பாடமாக பயிற்றுவிக்கப்படவில்லை என்றும் அவர் குறைகூறினார்.

இதனிடையே பி.ஜே.பி. சார்பிலான மும்மொழி ஆதரவு கையெழுத்து இயக்கம் நாமக்கல், வேலூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் முழுவீச்சில் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

**லோக் அதாலத்**

**தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வரும்** சனிக்கிழமை லோக் அதாலத் மக்கள் நீதிமன்றம் நடைபெறுகிறது.

**விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும்** மக்கள் நீதிமன்றத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட முதன்மை நீதிபதி மணிமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

திருவாரூர் மாவட்டத்தில் வழக்கு தொடுத்தவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி சமரச முறையில் வழக்குகளுக்கு தீர்வுகாண மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

இருவரி

**சிவகங்கை மாவட்டத்தில் TNPSC குரூப் - 1** முதல்நிலை தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இன்றுமுதல் தொடங்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 5 வயது** பூர்த்தியடைந்த அனைத்து குழந்தைகளையும் அரசு பள்ளிகளில் சேர்க்க பெற்றோர் முன்வரவேண்டுமென ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கோடை விடுமுறையை ஒட்டி** மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு வரும் 28-ம் தேதிமுதல் சிறப்பு மலை ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

பேரிஜம் ஏரி

**கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில்** யானைகள் நடமாட்டம் காணப்படுவதால் இன்றுமுதல் சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப் பட்டுள்ளதாக எமது திண்டுக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

கோவில்

**புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர் அருள்மிகு** முத்துமாரியம்மன் திருக்கோவில் தேர் திருவிழாவை ஒட்டி வரும் 10-ம் தேதி இம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

கபடி

**ஆசிய மகளிர் கபடி சாம்பியன் பட்ட போட்டிகள்** ஈரானில் இன்று தொடங்குகின்றன.

இந்தியா இன்று பிற்பகல் பங்களாதேஷையும், இரவு தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

இறுதி போட்டி நாளைமறுநாள் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

ஃபிரான்ஸில் நடைபெறும் ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி, H.S. பிரணாய் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் **Pruthvi Krishnamurthy Roy, Krishnaprasad Sai Pratheek** இணை – தைவான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**